கீயையும் ஒரு சேர அழுத்துவதன் மூலமாக அல்லது Esc கீயை அழுத்துவதன் மூலமாக படத்தினை சிறிய Window-விற்குள் கொண்டு வரலாம்.




Progress bar ஆனது தற்பொழுது பாடல் எதுவரை பாடியுள்ளது என்பதை அறிந்து கொள்ள பயன்படுகிறது. அதில் வரும் Seek என்ற Button-ஐ இழுத்து நகர்த்தி நமக்கு தேவையான பகுதியிலிருந்து பாடலை அல்லது படத்தை இயங்குமாறு செய்யலாம்.


பாடல்கள் பெரும்பாலும் .Mp3, WMV, WAV, போன்ற Extension-களைக் கொண்ட File-களாக காணப்படும்.

பாடல் அல்லாத மற்ற ஒலிகள் .WAV, .MID, போன்ற Extension-களைக் கொண்ட File-களாக காணப்படும்.

Video-க்கள் பெரும்பாலும் .DAT, .MPG, .AVI, .VOB போன்ற Extension-களைக் கொண்ட File-களாக காணப்படும்

## File-களை தேட


Computer-ல் இயல்பாகவே பல ஆயிரக்கணக்கான File-கள் காணப்படும். எனவே நம்முடைய File-களை தேட **Ctrl** என்ற கீயையும் **F** என்ற கீயையும் ஒருசேர அழுத்தவும். அல்லது Start Button-ஐ Click செய்து அங்கு **Search**-ஐ தேர்வு செய்யவும். 





**Pictures, music, or video** என்பதை Click செயவதன் மூலம் Computer-ல் உள்ள படங்களையும், பாடல்களையும், படக் காட்சிகளையும் தேடலாம்.




பிறகு வரும் Window-வில் **Pictures Photos** என்பதை தேர்வுசெய்து பிறகு **Search** என்ற Button-ஐ Click செய்யவும்.








மீண்டும் முதல் பக்கத்திற்கு வருவதற்கு **Back** என்ற Button-ஐ இரண்டு முறை Click செய்யவும்.

**All file and folders** என்பதை Click செய்யவும். 


பிறகு வரும் Window-வில் நாம் தேடவேண்டிய File-யும், எந்த Drive-ல் தேட வேண்டும் என்பதையும் தெரிவிக்கலாம்.





.PDF என்ற Extension-ஐ கொண்டுள்ள File-களை மட்டும் தேட வேண்டும் என்றால் All or part of the file name: என்ற பகுதியில் *.pdf என்று கொடுக்க வேண்டும்.




Exam என்ற பெயரினை ஆரம்பமாகவும் pdf என்பதனை Extension பெயராகவும் கொண்டுள்ள File-ல் May 2009 என்ற வார்த்தை உள்ளதா என்பதையும் தேடவேண்டுமென்றால் All or part of the file name: என்ற பகுதியில் Exam*.pdf என்றும் A word or phrase in the file: என்பதில் May 2009 என்றும் Look in:

என்பதில் எந்த Drive-ல் தேட வேண்டும் என்பதையும் குறிப்பிட வேண்டும். பிறகு **Search** என்ற Button-ஐ Click செய்யவும்.



Lesson - 9

# கணினி பராமரிப்பு (Computer Maintenance)

பொதுவாக நாம் கணினியை பயன்படுத்திய பின்னர் அதை சரியாக பராமரிப்பது கிடையாது சான்றாக தொடர்ந்து இயங்கக்கூடிய கணினியை மாதம் ஒருமுறையாவது கண்டிப்பாக Maintenance செய்தாக வேண்டும்.

- Temporary File-களை அழித்தல்
- Defragment செய்தல்
- Virus Scan செய்தல்
- கணிப்பொறியில் படிந்துள்ள தூசுகளை அகற்றி சுத்தம் செய்தல்


**Temporary file**

Temporary file என்பது நாம் Software-களை Install செய்யும் பொழுதோ அல்லது பயன்படுத்தும்பொழுதோ நேரடியாக Hardisk-ல் உள்ள C,D,E… போன்ற Drive-களை பயன்படுத்துவதில்லை மாறாக Hard Disk drive-ல் Temp என்ற Folder-ல் வைத்து பயன்படுத்தி பின்னர் இறுதியாகத்தான் நாம் தேர்ந்தெடுக்கும் இடங்களில் சேமிக்கவோ அல்லது Install ஆகவோ செய்கின்றது. இவ்வாறு இந்த Software-கள் பயன்படுத்திய Temporary File-கள் கணினியால் அழிக்கப்படாமல் அப்படியே விட்டுச் செல்லப்படுகின்றன. இதனால் நினைவகத்தில் கூடுதல் சுமை ஏற்படுகிறது. இவற்றை தவிர்க்க Temp Folder, Recycle Bin மற்றும் Internet–ற்கான Temporary File-களை அடிக்கடி நீக்கி சுத்தம் செய்திடல் வேண்டும்.


Hard disk-ல் Clean செய்திட Start Button-ஐ Click செய்து அங்கு All Programmes-ஐ தேர்வு செய்யவும். அங்குள்ள Accessories-ல் காணப்படும் System Tools-ல் உள்ள Disk Clean Up-ஐ தேர்வு செய்யவும்.





அல்லது My Computer-ல் எந்த Disk-ஐ Defragment செய்ய வேண்டுமோ அந்த Drive-ஐ Mouse-ல் வலது Button-ஐ அழுத்தவும் அங்கு Properties-ஐ தேர்வு செய்யவும்.




திரையில் தோன்றும் Properties Window-ல் General Tab-ல் Disk Cleanup-ஐ தேர்வு செய்யவும்.




பிறகு தோன்றும் Window-ல் Drive-ஐ தேர்வு செய்யவும்.




© Comtech Advanced Study Centre 

திரையில் தோன்றும் Disk Clean up Window-வில் எந்தெந்த தேவையில்லாத File-களை அழித்திட வேண்டும் என்பதை தேர்வு செய்து OK Button-ஐ Click செய்யவும்.




தேர்வை உறுதிப் படுத்துவதற்காக தோன்றும் Window-விற்கு Yes என்ற Button-ஐ தேர்வு செய்யவும்.

# Defragmentation


நாம் தொடர்ந்து கணிப்பொறியை பயன்படுத்தும்பொழுது நாம் உருவாக்கும் File-களும், Software-களை பயன்படுத்தும்பொழுது அவற்றால் உருவாக்கப்படும் File-களும் மற்றும் Software-களை Install செய்திடும்பொழுது உருவாகும் File-களும் Hard Disk-ல் அச்சமயத்தில் எங்கு இடமிருக்கின்றதோ அங்கெல்லாம் வைக்கப்பட்டுவிடுகிறது. இவ்வாறாக கணிபபொறியை அதிக அளவில் நீண்ட நாட்களாக தொடர்ந்து பயன்படுத்தி வரும்பொழுது ஒரு Software-க்கான File-கள் Hard disk-ல் வெவ்வேறு இடங்களில் வைக்கப்பட்டிருப்பதால் ஒவ்வொரு முறையும் நாம் Software-களை இயக்கும் பொழுதும் அவை தனக்குரிய File-களை தேடிக் கண்டுபிடித்து ப்பிடித்து இயங்க ஆரம்பிப்பதற்கு அதிக நேரம் ஆகிறது. காலப்போக்கில் கணிப்பொறியின் வேகமும் வெகுவாக குறைய ஆரம்பிக்கின்றது.

இச்சிக்கலை தவிர்த்திட அந்தந்த Software-களுக்கான File-களை ஒருங்கிணைத்து ஒரே இடத்தில் வைத்திட உதவும் Defragment என்ற வசதியை குறைந்த பட்சம் மூன்ற மாதங்களுக்கொரு முறையாவது பயன்படுத்தி கணிப்பொறியை பராமரித்திடல் வேண்டும்.


Start menu-வை Click செய்து All Programs-க்கு செல்லவும் அங்கு உள்ள Accessories-ல் System Tools-ல் காணப்படும் Disk Defragment-ஐ தேர்வு செய்திடல் வேண்டும் அல்லது My Computer-ல் எந்த Disk-ஐ Defragment செய்ய வேண்டுமோ அந்த Drive-ஐ Mouse-ல் வலது Button-ஐ அழுத்தவும் அங்கு Properties-ஐ தேர்வு செய்யவும்.




திரையில் தோன்றும் Properties Window-ல் Tools Tab-ற்கு செல்லவும் அங்கு Defragment-ஐ தேர்வு செய்யவும்.





Disk Defragment Window-ல் Defrag செய்ய வேண்டிய Drive-ஐ தேர்வு செய்து Analyze Button-ஐ Click செய்திட வேண்டும்





Defrag முடியும் வரை கணிப்பொறியில் வேறெந்த வேலைகளையும் செய்வதை தவிர்க்க வேண்டும். கணிப்பொறி இயக்கத்தினையும் நிறுத்தாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.




Defragment முடிந்த பிறகு தோன்றும் Window-ல் View Report-ஐ Click செய்து Defrag ஆனதற்கான முடிவுகளை தெரிந்து கொள்ளலாம்.


Disk Defragmenter
File Action View Help
Volume Session Status File System Capacity Free Space % Free Space
(C:) Defragmented NTFS 29.29 GB 19.92 GB 68 %
(D:) NTFS 24.41 GB 24.25 GB 99 %
(E:) NTFS 20.81 GB 12.34 GB 59 %
KATAX (F:) FAT32 3.74 GB 2.69 GB 72 %
Disk Defragmenter
Defragmentation is complete for: (C:)
Some files on this volume could not be defragmented.
Please check the defragmentation report for the list of these files.
View Report
Close
Estimated disk usage before defragmentation:
Estimated disk usage after defragmentation:
Analyze Defragment Pause Stop View Report
Fragmented files Contiguous files Unmovable files Free space
start
Disk Defragmenter
EN 10:29 AM


Disk Defragmenter
File Action View Help
Volume Session Status File System Capacity Free Space % Free Space
(C:) Defragmented NTFS 29.29 GB 19.92 GB 68 %
(D:) NTFS 24.41 GB 24.25 GB 99 %
(E:) NTFS
KATAX (F:) FAT32
Defragmentation Report
Defragmentation report for: (C:)
Volume information:
Volume (C:)
Volume size = 29.29 GB
Cluster size = 4 KB
Used space = 9.37 GB
Free space = 19.92 GB
Percent free space = 68 %
Volume fragmentation
Files that did not defragment:
Fragments File Size File Name
Print... Save As... Close
Estimated disk usage before defragmentation:
Estimated disk usage after defragmentation:
Analyze Defragment Pause Stop View Report
Fragmented files Contiguous files Unmovable files Free space
start
Disk Defragmenter
EN 10:30 AM

# Virus

கணிப்பொறிக்கு தீங்கிழைக்கக்கூடிய Programme-களான Virus Programme-கள் நமது கணிப்பொறிக்கு பல்வேறு இழப்புகளை ஏற்படுத்திவிடக்கூடும். இவ்வாறு நமது கணிப்பொறிக்கு தீங்கிழைக்கக் கூடிய தேவையில்லாத Programme-களையே Virus Programme-கள் என்கிறோம். (Vital Information and Resources Under Seize)

**பரவும் வழிகள்**

1. Internet

   ஒரு சில இணைய தளங்களை நாம் பார்வையிடும்மொழுது நமக்கு தெரியாமலேயே நம்முடைய கணிப்பொறியை Virus-கள் தாக்கக்கூடும்.

2. Other Computers

   ஏற்கனவே Virus உள்ள வேறு கணிப்பொறிகளில் பயன்படுத்திய Pendrive, Memory Card, CD/DVD மற்றும் Hard disk ஆகியவற்றை நம்முடைய கணிப்பொறியில் பயன்படுத்தும்பொழுது நமது கணிப்பொறிக்கும் Virus பரவக் கூடும்.

**Virus-ஆல் ஏற்படும் பாதிப்புகள்**

1. கணிப்பொறியில் சேமித்து வைக்கப்பட்டுள்ள தகவல்கள் சேதப்படுத்தப்படுகின்றன.
2. Install செய்யப்பட்டுள்ள முக்கியமான விலை மதிப்புமிக்க Software-கள் இயங்கமுடியாதவாறு முடக்கப்படுகின்றன.
3. கணிப்பொறியின் வேகம் குறைதல்
4. Internet-ன் வேகம் குறைதல்
5. வெளியிலிருந்து கொண்டு வரப்படும் நினைவகச் சாதனங்களான Pendrive, Memory Card, CD/DVD மற்றும் Hard disk-களை அணுகமுடியாதவாறு தடுக்கிறது.
6. மற்ற கணிப்பொறிகளுக்கும் பரவுதல்
7. சில நேரங்களில் கணிப்பொறியை முற்றிலும் இயக்கமுடியாதவாறு முடக்கிவிடுகிறது.

**தவிர்த்திடும் வழிகள்**

1. கணிப்பொறியில் மேம்படுத்தப்பட்ட Virus எதிர்ப்பு தொகுப்புகளான Antivirus Programme-களை நிறுவிடுதல் வேண்டும்.

2. அவ்வப்பொழுது கணிப்பொறியில் Virus இருக்கின்றனவா என்பதனை Antivirus programme மூலமாக சோதித்துக் கொள்ளவேண்டும்.


3. வேறு கணிப்பொறிகளில் இருந்து கொண்டு வரப்படும் நினைவக சாதனங்களான Pendrive, Memory Card, CD/DVD மற்றும் Hard disk-களை Virus இருக்கின்றனவா என்பதை சோதனை செய்து Virus நீக்கிய பிறகே பயன்படுத்த வேண்டும்.

4. Antivirus Programme களுடன் இயங்கும் Internet Security தொகுப்பினையும் சேர்த்து நிறுவிக் கொள்வதன் மூலம் இணையதளங்கள் மூலம் Virus பரவுவதை தவிர்த்திடலாம்.


5. Antivirus programme-களை அவ்வப்பொழுது மாதமொருமுறையாவது மேம்படுத்திக் கொள்ளவேண்டும்.

உதாரணமாக AVG என்ற Virus Scanner Software-ஐ எவ்வாறு பயன்படுத்துவது என்பதனை இங்கு பார்க்கலாம்.


Start menu-வில் All Programmes-ஐ தேர்வு செய்து அங்கு AVG ஐ தேர்வு செய்யலாம் அல்லது Desktop-ல் AVG Shortcut-ஐ தேர்வு செய்து AVG ஐ இயக்கலாம் அல்லது Systerm Tray-ல் AVG Icon-ஐ Click செய்வதன் மூலமாகவும் AVG-ஐ இயக்கிக் கொள்ளலாம்.



AVG–ஐ இயக்கியவுடன் தோன்றும் Window-ல் இடதுபுறமுள்ள Computer Scanner-ஐ தேர்வு செய்யவும்.





அப்பொழுது வலது புற Window-ல் தோன்றும் கணிப்பொறி முழுவதும் Virus சோதனை செய்யவேண்டுமென்றால் Scan Whole Computer என்பதனை தேர்வு செய்யவும். குறிப்பிட்ட Disk அல்லது File-களை Scan செய்திட Scan specific files or folders என்பதனை தேர்வு செய்திட வேண்டும்.




Virus Scanner ஆனது கணிப்பொறியில் முழுமையாக சோதனையை முடிக்கும் வரை காத்திருக்க வேண்டும்.

Virus இருக்கின்றதா அல்லது இல்லையா என்பதனை சோதனைகள் முடிவுகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.




வைரஸ் இருப்பின் அவற்றை பட்டியலிட்டுக் காட்டும். நீக்காமல் இருப்பற்றை நீக்கிட அங்கு Remove all unhealed infection என்ற Button-ஐ click செய்திடவும்.



Pendrive, Memory Card, CD/DVD அல்லது Hard disk-களை வேறு கணிப்பாறிகளிலிருந்து கொண்டு வரும்மொழுது அவற்றை கணிப்பொறியில் இணைத்தவுடனே இயக்கிடவோ அல்லது ஏதேனும் தகவல்களை எடுக்கவோ வைக்கவோ கூடாது. அவற்றை முதலில் முழுமையாக Virus உள்ளதா என சோதிக்க வேண்டும்.

Pendrive, Memory Card, CD/DVD மற்றும் Hard disk போன்றவைகளை கணிப்பொறியில் இணைத்தவுடன் My Computer-ல் எந்த பெயரில் காட்டுகிறது என்பதனை முதலில் பார்த்து அதன் பிறகு அதன் மீது Mouse-ன் வலது Burtton-ஐ அழுத்தவும். உடனே வரும் menu-வில் Scan with AVG என்பதனை தேர்வு செய்யவும். AVG-யானது Virus இருப்பதற்கான சோதனையை அரம்பித்து முடிக்கும் வரை காத்திருக்க வேண்டும்.

Virus அனைத்தையும் நீக்கிய பிறகே நினைவக சாதனங்களை பயன்படுத்த வேண்டும் ஒருவேளை Virus-ஐ AVG ஆல் நீக்க முடியாவிட்டால் அச்சாதனத்தை கணிப்பொறியிலிருந்து எடுத்துவிடவேண்டும். முக்கியமான தகவல்கள் அதில் இல்லை என்றால் அவற்றறை Format செய்து விட்டு பயன்படுத்திக் கொள்ளலாம். முக்கியமான தகவல்கள் இருப்பின் வேறு Antivirus Programme களின் மூலமாக Virus-ஐ நீக்க முயற்சிக்க வேண்டும். Virus முழுமையாக நீக்கிய பிறகே அவற்றை பயன்படுத்த வேண்டும் இல்லையென்றால் அதிலுள்ள Virus ஆனது நமது கணிப்பொறிக்கும் பரவிவிடக் கூடும்.

Anti Virus Programme-களை அவ்வப்பொழுது இணையதளத்தின் வாயிலாக மேம்படுத்திக் கொள்ள வேண்டும் மேம்படுத்தப்பட்டால்தான் புதிதாக வரும் Virus-களை அவற்றால் அடையாளம் கண்டு நீக்க முடியும். மாதமொருமுறையாவது அந்தந்த Antivirus Programme-களின் இணைய தளத்திற்கு சென்று மேம்படுத்திக் கொள்ள வேண்டும் அல்லது இணைய வசதி உள்ளவர்களிடமிருந்து Antivirus Update-ற்கான File-களை பெற்று மேம்படுத்திக் கொள்ளவும்.


AVG-ல் Tools மெனுவிற்கு சென்று அங்குள்ள Update-ஐ தேர்வு செய்தால் தானாக இணையதளத்திற்குச் சென்று மேம்படுத்திக் கொள்ளும். அதே Tools மெனுவில் Update from Directory என்பதை தேர்வு செய்தால் நாம் மற்றவர்களிடமிருந்து கொண்டுவந்துள்ள Virus Update file-கள் மூலமாக AVG-ஐ Update செய்து கொள்ளலாம்.

## Lesson - 10
# Internet


Internet-ல் உள்ள தகவல்களை பார்க்க பயன்படும் Software-களை Browser என்று கூறுகிறோம். தற்பொழுது Internet Explorer, Mozilla Fire Box, Opera போன்ற Browser-கள் Internet பார்ப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது.


நமது Computer-க்கு Internet இணைப்பு கொடுக்கப்பட்டு இருந்தால் மட்டுமே Internet நாம் பார்க்கமுடியும்.

Start Button-ஐ Click செய்யவும். அங்கு All Programs-ஐ தேர்வு செய்யவும். அங்கு **Internet Explorer**-ஐ தேர்வு செய்யவும். 


நாம் பார்க்க வேண்டிய Website Address-ஐ Address Bar-ல் Type செய்து **Enter** கீயை அழுத்தவும் அல்லது **Go** என்ற Button-ஐ Click செய்யவும்.



Comtech || Spreading Technology || - Windows Internet Explorer
http://www.comtechonnet.com/
File Edit View Favorites Tools Help
Comtech || Spreading Technology ||
......Spreading Technology.....
Worldwide
Comtech Advanced Study Centre
Spreading Technology Worldwide
COMTECH
Spreading Technology
Home Profile Education Support Jobs F.A.Q Contact us
Welcome to Comtech
காம்டெக், மணப்பாறை - 621306
Done
Internet
100%


Manaparai Welcomes You | மணப்பாறை தங்களை அன்புடன் வரவேற்கிறது - Windows Internet Explorer
http://www.manaparai.in/
File Edit View Favorites Tools Help
Manaparai Welcomes You
மணப்பாறை தங்களை அன்புடன் வரவேற்கிறது
Tourism | Municipality Events Education Consumer Council Comtech Gallery Feedback
Entire database about Manaparai, Trichy District
anaparai.in
Telephones
City Info
Train Timings
Important Address
Features
Temples
Contact us
Chat with your Friends (if they already come into the chatroom)
Nick Name:
Enter Chat
Internet
100%

## Internet-ல் தகவல்களைத் தேட

நமக்கு தேவையான தகவல்கள அடங்கிய Website-ன் சரியான Address தெரியாத பொழுது தகவல்களை தேடி தருவதற்கென்றே சில Website-கள் உள்ளன (Search Engine). உதாரணமாக

www.google.com
www.yahoo.com
www.rediff.com
www.altavista.com




Internet-ல் நாம் தேட வேண்டிய தகவல்களை டைப் செய்து Enter கீயை அழுத்தியவுடன் உலக முழுவதுமுள்ள அனைத்து Website-களிலிமிருந்து தகவல்களை தேடி பட்டியலிடும்.




அங்கு நாம் தேடிய தகவலுக்கு பொருத்தமான இணைப்பை Click செய்து பெற்றுக் கொள்ளலாம். புதிய Window அல்லது புதிய Tab-ல் நாம் தேர்வு செய்யும் Website தோன்ற வேண்டும் என்றால் Mouse-ல் Right Button-ஐ Click செய்து **Open in New Tab** அல்லது **Open in New Window-ஐ** Click செய்யவும்.




## Internet-ல் படங்களை தேட

Google ல் படங்களை தேட Google Window-ன் மேல் இடது ஓரத்தில் இரண்டாவதாக உள்ள **Images-ஐ** தேர்வு செய்யவும்.

இப்பொழுது Google Search bar-ல் தகவல்களை type செய்து Enter கீயை தட்டவும். நாம் கொடுத்த தகவல்களுக்குரிய படத்தினை அனைத்து Website-களிலிருந்தும் பட்டியலிட்டு காட்டும்.




தற்பொழுது Browser window-ல் தெரியும் படங்களில நமக்கு படித்தவற்றின் Mouseல் Right Button-ஐ Click செய்து **Save Image As** என்ற Option-ஐ தேர்வு செய்து நமது கணிப்பொறியில் சேமித்துக் கொள்ளலாம்.

## Internet பக்கங்களை சேமிக்க

Internet-ல் தெரியும் தகவல்களை அப்படியே Internet பக்கங்களாகவே சேமிக்க Browser-ன் File மெனுவிற்கு சென்று **Save As**..ஐ தேர்வு செய்யவும் (Mozilla FireFoxல் **Save Page As**..ஐ தேர்வு செய்யவும்).

சேமிக்கப்பட்ட பக்கங்கள் HTML File-களாக நமது கணிப்பொறியில் இடம் பெற்றிருக்கும் அவற்றை Internet இல்லாதபொழுதுகூட நாம் திறந்து பார்த்துக் கொள்ளலாம்.

தேவையில்லாத Tab-களை மூடுவதற்கு Tab-ன் வலது மூலையில் உள்ள **Close Tab** என்ற Button-ஐ தேர்வு செய்யவும். அல்லது **Ctrl** + **F4** கீகளை ஒரு சேர அழுத்தவும்.


Internet-ல் இணையதளங்களை பார்க்கும் பொழுது ஏதேனும் தடங்கல் ஏற்பட்டு பாதியில் நின்றால் அதனை மீண்டும் கொண்டு வர Keyboard-ல் **F5** என்ற கீயை அழுத்தவும் அல்லது Internet Explorer என்றால் **View**-ல் **Refresh**-ஐ தேர்வு செய்யவும் அல்லது Mozilla FireFox என்றால் **View**-ல் **Reload** என்பதனை தேர்வு செய்யவும்.

Internet-ல் நாம் காணும் பக்கங்களை Print எடுக்க **Ctrl** மற்றும் **P**-கீகளை ஒன்றாக அழுத்தவும் அல்லது **File** மெனுவில் **Print**-ஐ தேர்வு செய்யவும்.


**Internet-ல் செய்திகள் பார்க்க**

தினசரி பத்திரிக்கைகளில் செய்திகளை பார்ப்பது போல் Internet-லும் செய்திகளை பார்கலாம். அதற்கென்றே பல இணையத் தளங்கள் உள்ளன.

தமிழில் செய்திகளை பார்க்க Googleல் உள்ள மொழிப் பட்டியலில் Tamil-ஐ தேர்வு செய்யவும். பிறகு Google window-ன் மேல் பகுதியில் உள்ள **News** என்பதனை தேர்வு செய்யவும்.




தற்பொழுது தமிழில் செய்திகள் தோன்றுவதை காணலாம்.






## Internet-ல் உலக வரைபடங்களை பார்க்க

உலக நாடுகளுக்கு நேரடியாக சென்று பார்க முடியாத குறையினை இணைய தளங்கள் பல நிவர்த்தி செய்கின்றன. அவற்றுள் Google Map, Wikimap ஆகிய இணைய தளங்கள் உலகளவிலான வரைபடங்களையும் நேரடி காட்சி அனுபவங்களையும் நமக்கு தருகின்றன.

www.map.google.com
www.wikimapia.org

Google window-ன் மேல் பகுதியில் உள்ள **Maps** என்பதனை தேர்வு செய்யவும்.





1. **Arrows** – குறிப்பிட்ட திசையில் பயணிக்க
2. **Street View** – Map-ல் உள்ள தெருக்களை பார்வையிட
3. **Zoom** – Map-ஐ பெரிதாக்க அல்லது சிறிதாக்க.
4. **Zoom slider** -. Map-ஐ பெரிதாக்க அல்லது சிறிதாக்க

 - Map-ல் நாம் வசிக்கும் பகுதியினை காட்டுவதற்கு இந்த Show My Location-ஐ தேர்வு செய்தவுடன் வரும் Message Bar-ல் **Share Location**-ஐ தேர்வு செய்தால் நம்முடைய ஊர் Map-ல் வந்துவிடும்.








## Street Guide

Search பகுதியில் நாம் பார்க்க வேண்டிய ஊரின் பெயரை type செய்யவும்.

Map-ல் உள்ள Street guide-ஐ இழுத்து வந்து நாம் பார்க்க வேண்டிய பகுதியில் வைத்தால் அந்தபகுதியில் உள்ள தெருக்களை நாம் பார்வையிடலாம்.

உதாரணமாக Eiffel Tower-ஐ type செய்து enter கீயை அழுத்தியவுடன் தோன்றும் Map-ல் User guide ஆனது நாம் தேடவேண்டிய பகுதியினை காட்டும் அந்த Window-ல் **Street View** என்பதனை தேர்வு செய்யவும்.





அல்லது Map-ல் உள்ள Street guide-ஐ இழுத்து வந்து நாம் பார்க்க வேண்டிய பகுதியில் வைத்தால் அந்தபகுதியில் உள்ள தெருக்களை நாம் பார்வையிடலாம். 

அந்த பகுதிக்குரிய Street View கொடுக்கப்பட்டிருந்தால் மட்டுமே Street guide-ஐ அழைக்கமுடியும் 

Map-ன் மேல் பகுதியில் **Map**-ஐ தேர்வு செய்தால் தேர்வு செய்தபகுதியின் வரைபடத்தை பார்க்கலாம். அல்லது **Sattellite** என்பதை தேர்வு செய்தால் அந்த பகுதியின் Sattellite Image-ஐ பார்க்கலாம். **Traffic** என்பதனை தேர்வு செய்தால் போக்குவரத்து வழிகளை பார்வையிடலாம்.







## Google Books

Google-ல் புத்தகங்களை பார்வையிடலாம் சில புத்தகங்களை பதிவிறக்கமும் செய்து கொள்ளலாம்.

Google window-ன் மேல் பகுதியில் உள்ள **Books** என்ற இணைப்பை தேர்வு செய்யவும்.




Google window-ல் காட்டப்படும் புத்தகங்களை தேர்வு செய்து பார்வையிடலாம்.

பல நாளிதழ்கள் தங்களுக்கென்று தனியே இணையதளங்களை கொண்டுள்ளன.

உதாரணமாக

தினமலர் - www.dinamalar.com
தினமணி - www.dinamani.com
தினத் தந்தி - www.dailythanthi.com
தினகரன் - www.dinakaran.com
மாலைமலர் - www.malaimalar.com
நக்கீரன் - www.nakkeeran.in
ஆனந்த விகடன் - www.vikatan.com
கல்கி - www.kalkiweekly.com

| | | |
|---|---|---|
| The Hindu | - | www.thehinduonnet.com<br>www.thehindu.com |
| India Express | - | www.indianexpress.com |
| Tamilbooks | - | www.noolagam.net<br>www.noolaham.com |
| Dictionary | - | www.dictionary.com<br>www.webopedia.com<br>www.wikipedia.org<br>www.howstuffworks.com |
| Universities in Tamil nadu | - | www.tnuniv.ac.in/universities.html |
| University of Madras | - | www.unom.ac.in |
| Bharathiyar University | - | www.b-u.ac.in |
| Bharathidasan University | - | www.bdu.ac.in |
| Madurai Kamaraj University | - | www.mkuniversity.org |
| Periyar University | - | www.periyaruniversity.ac.in |
| Anna University - Chennai | - | www.annauniv.edu |
| Annamalai University | - | www.annamalaiuniversity.ac.in |
| Alagappa University | - | www.alagappauniversity.ac.in |
| Mother Terasa Women's University | - | www.motherteresawomenuniv.ac.in |
| Tamil University | - | www.tamiluniversity.ac.in |
| Thiruvalluvar University | - | www.tvuni.org |
| Tamil Nadu Open University | - | www.tnou.ac.in |
| Tamil Nadu Agricultural University | - | www.tnau.ac.in |
| Tamil Nadu Dr. MGR Medical University | - | www.tnmmu.ac.in |
| Tamil Nadu Physical Education and Sports University | - | www.tnpesu.ac.in |
| Anna University – Coimbatore | - | www.annauniv.ac.in |
| Anna University - Tiruchy | - | www.tau.edu.in |
| Colleges in Tamil nadu | - | www.collegesintamilnadu.com |
| Government of Tamil nadu | - | www.tn.gov.in<br>www.tn.nic.in |
| Textbook online | - | www.textbooksonline.tn.nic.in |
| Tenders | - | www.tenders.tn.gov.in |
| TNPSC | - | www.tnpsc.gov.in |
| Employment | - | www.employment.tn.gov.in |

| | | |
|---|---|---|
| Tamil nadu statisticalhandbook | - | www.tn.gov.in/deptst |
| Pension details | - | www.agae.tn.nic.in |
| TRB | - | www.trb.nic.in |
| Government GO | - | www.tn.gov.in/gorders/default.html |
| Tamilnadu map | - | www.tnmaps.tn.nic.in |
| School Education | - | www.pallikalvi.in |
| UGC | - | www.ugc.ac.in |
| Manaparai | - | www.manaparai.in |
| Comtech Computers (Resource Person) | - | www.comtechonnet.com |

Wikipedia என்ற இணைய தளம் (www.wikipedia.org) எவரும் தொகுக்க கூடிய இலவசமாக பயன்படுத்தக் கூடிய வணிகநோக்கமற்ற விக்கிமீடியா நிறுவனத்தால் வழங்கப்படுகிறது. மேலும் பல மொழிகளிலும் சேவைகளை வழங்கி வருகிறது.

| | | |
|---|---|---|
| http://www.wikipedia.org | - | Encyclopedia |
| http://ta.wiktionary.org/wiki/ | - | Tamil Dictionary |
| http://ta.wikinews.org/wiki/ | - | Wiki Tamil News |
| http://en.wikiversity.org/wiki/Wikiversity | - | Wiki University |
| http://species.wikimedia.org | - | Wiki Species (உயிரினங்கள்) |
| http://en.wikiquote.org | - | Wiki Quotes |
| http://en.wikibooks.org | - | Wiki Books |
| http://ta.wikisource.org/wiki/ | - | Wiki source (இணைய நூலகம்) |

www.wikimapia.org என்ற இணைய தளம் உலகத்தின் பகுதிகளை Satellite image-களாக வழங்குகிறது. அதில் நம்முடைய பகுதிகளை சேர்த்துக் கொள்ள வாய்ப்புகளை வழங்கியுள்ளது. தமிழிலும் சேவையினை வழங்கியுள்ளது.

**E-mail**

உலகின் எந்த பகுதிக்கும் ஒரு நிமிடத்திற்குள் நம்முடைய தகவல்களை E-mail மூலமாக அனுப்பலாம். Internetல் e-Mail வசதிகளை இலவசமாக தரும் சில Websiteகள் உள்ளன. உதாரணமாக

www.yahoo.com
www.gmail.com
www.rediff.com
www.hotmail.com
www.mail.com
www.ymail.com
www.in.com
www.timesofindia.com


Internet-ல் E-mail சேவையை வழங்குபவர்களை Mail Server என்கிறோம். அந்நிறுவனத்திடம் நமக்கென்று ஒரு E-mail முகவரியை பெற்றுக் கொள்கிறோம். நம்முடைய mailகளை சேகரிப்பதற்கு நமக்கென்று தனியே இடம் ஒதுக்கப்படுகிறது. நமக்கு வரும் mailகள் நம்முடைய mail box-ல் சேகரித்து வைக்கப்படுகிறது. நமக்கென்று ஒதுக்கப்படும் E-mail முகவரியில் நாம் தேர்ந்தெடுத்த பெயர் மற்றும் முகவரிகளை சேமிக்கலாம்.

தேவையானபொழுது mail server-ன் website-ற்கு சென்று நமக்கென்று கொடுக்கப்பட்டுள்ள User name மற்றும் Password-ஐ கொடுத்து Login செய்து நம்முடைய mail-களை பார்வையிட்டுக் கொள்ளலாம்.

**E-Mail முகவரியை உருவாக்கும் முறை**


உதாரணமாக Google நிறுவனம் வழங்கும் இலவச மெயில் சேவையான Gmail-ல் புதிதாக E-mail Address எவ்வாறு உருவாக்குவதென்று காணலாம்.

www.gmail.com என்ற இணையத் தளத்திற்கு செல்லவும். Google window-லும் Gmail-ற்கும் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.




புதிதாக Email Account உருவாக்க **Create an account>>** என்ற இணைப்பை தேர்வு செய்யவும்.

E-mail Account உருவாக்குவதற்கு தேவையான தகவல்களை கொடுப்பதற்குரிய Window தோன்றும்.





முதலில் நம்முடைய பெயரின் முதற்பகுதியையும், இரண்டாவது பகுதியையும கொடுக்கவும்.

E-mail address-க்கான நாம் விரும்பும் User name-யும் கொடுக்கவேண்டும்.





நாம் கொடுத்துள்ள பெயரில் வேறு யாரும் E-mail Address உருவாக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்ள **check availability** என்ற Button-ஐ Click செய்யவும்.


நம்முடைய பெயரில் உருவாக்கமுடியும் என்றால் rcmohan75 is available என்ற வாக்கியம் தோன்றும் இல்லையென்றால் நம்முடைய பெயரில் E-mail Address உருவாக்க வாய்ப்பில்லை என்பதையும் சில மாற்றுப் பெயர்களையும் தெரிவிக்கும்.




பிறகு நம்முடைய accountன் பாதுகாப்பு வசதிக்காக இரகசிய வார்த்தை எனப்படும் Password-ஐ **Choose password**-ல் கொடுக்கவும். Password-ஐ உறுதிப் படுத்துவதற்காக Password-ஐ மீண்டும் அடுத்துள்ள **Re-Enter Password** பகுதியல் கொடுக்கவும்.




User name-யும் Password-யும் மறந்து விடக்கூடாது. ஒரு வேளை password-ஐ மறந்து விட்டால் அதை நினைவூட்டுவதற்தான கேள்வி ஒன்றையும் அதற்கான பதிலையும் கொடுத்து விட்டால் என்றாவது ஒருநாள் நம்முடைய Password-ஐ மறந்த பொழுது இந்த கேள்வியை கேட்டு அதற்கான பதிலை கொடுப்பதன் மூலம் மறந்துவிட்ட நம்முடைய Password-ஐ மீண்டும் நினைவூட்டிக் கொள்ளலாம்.




ஏற்கனவே ஏதேனும் E-mail Address இருந்தால் **Secondary Mail** என்ற பகுதியில் விருப்பமிருந்தால் கொடுக்கலாம்.




Location பகுதியில் நம்முடைய நாட்டை தேர்வு செய்யவும்.




பிறகு Word Verification பகுதியில் படமாக குறிப்பிடப்பட்டுள்ள எழுத்துக்களை கீழ்ப்பகுதியில் உள்ள Text Box-ல் type செய்யவும்.





இறுதியாக 

என்ற Button-ஐ அழுத்தவும்

வெற்றிகரமாக நம்முடைய Email account உருவாக்கப்பட்டுவிட்டால் அடுத்து வரும் Window-ல் **Show me my account** என்ற Button-ஐ Click செய்யவும்.





உடனே நம்முடைய Mail ஆனது திறக்கப்பட்டுவிடும்.




அங்கு நமக்கு வந்துள்ள Mail-களை காணலாம்.

Mail-களை பார்த்த பிறகு தவறாமல் Sign out செய்துவிட வேண்டும் இல்லையென்றால் வேறு யாரேனும் நம்முடைய mail Account-ஐ தவறாக பயன்படுத்திவிடக்கூடும்.


Window-ன் மேலே வலது பகுதியில் உள்ள **Sign out**-ஐ Click செய்யவும்.




Email Address-ஐ உருவாக்கிய பிறகு நம்முடைய Mail Address-ஐ பிறருக்கு தெரிவிக்கும்பொழுது username@mailservername என்ற அமைப்பிலேயே கூறவேண்டும். ஊதாரணமக rcmohan75@gmail.com என்று கூறவேண்டும்.

நம்முடைய mail-களை எப்பொழுதாவது பார்க்கவேண்டுமென்றால் Gmail தளத்திற்கு செல்லவேண்டும்.

அங்கு தோன்றும் Gmail Window-ல் Username-யும் Password-யும் கொடுத்து **Sign in** என்ற Button-ஐ Click செய்யவும்.




**Stay signed in** என்பதை Enable செய்தால் உங்கள் user name மற்றும் password-ஐ அதே கணிப்பொறியில் பதிவு செய்து வைத்துவிடும். எனவே அடுத்தமுறை நாம் மீண்டும் User name, password கொடுக்காமல் நேரே நம்முடைய mail-ஐ அனுகலாம். நம்முடைய சொந்த கணிப்பொறியாக இருந்தால் மட்டுமே அதனை Enable செய்யவேண்டும் இல்லையென்றால் வேறு யாரேனும் நம்முடைய mail Account-ற்கு எளிதாக செல்ல நேரிடும்.

பிறகு தோன்றும் mail window-ல் நாம் பார்க்கவேண்டிய mail-ஐ தேர்வு செய்தால் mail-ல் வந்துள்ள தகவல்கள் காட்டப்படும்.


Mail-ஐ பார்த்த பிறகு **Back to Inbox** என்ற இணைப்பை தேர்வு செய்தோ அல்லது **Inbox** என்ற இணைப்பை தேர்வுசெய்தோ மீண்டும் mail list-ற்கு செல்லலாம்.

Google Mail window-ன் இடது புறத்தில் உள்ள இணைப்புகள் mail அனுப்புவதற்கும் அனுப்பப்பட்ட mailகளை பார்ப்பதற்கும் பயன்படுகிறது.




Mail அனுப்புவதற்கான தகவல்களை தயார் செய்யும் பொழுது அழிந்து விடாமல் பாதுகாக்க **Ctrl** மற்று **S** என்ற Key-களை ஒன்றாக அழுத்துவதன் மூலமோ அல்லது mail box-ன் மேல் / கீழ் பகுதியில் உள்ள **Save Now** என்ற Button-ஐ Click செய்வதன் மூலமோ Draft-ல் சேமித்துக் கொள்ளலாம்.


புதிதாக mail அனுப்ப **Compose Mail-ஐ** தேர்வு செய்யவும்.




**To** என்ற பகுதியில் அனுப்ப வேண்டிய mail address-ஐ கொடுக்க வேண்டும்.


**Add Cc** (Add Corbon Copy) என்ற அமைப்பானது நாம் அனுப்பும் mail-ஐ மற்றும் சிலருக்கு அனுப்புவதற்கு பயன்படுகிறது.

**Add Bcc** (Add Blind Carbon Copy) என்ற இணைப்பானது Add Cc-ஐ போலவே இந்த mail-ஐ மற்றும் சிலருக்கு அனுப்புவதுடன் யார் யாருக்கெல்லாம் இதே mail அனுப்பியுள்ளோம் என்பதை அவர்களுக்குள் தெரியப்படுத்தாது.




**Subject** என்ற பகுதியானது அனுப்பப்படும் mail-ற்கு Title-ஆக பயன்படுகிறது. இந்த Tile அவர்களது Inbox-ல் முதலில் தோன்றும். இந்த Subject-ஐ பார்ப்பதன் மூலம Mail முக்கியத்துவத்தை mail-ஐ திறப்பதற்கு முன்னரே தெரிந்து கொள்ளலாம்.


**Attach Files** என்ற இணைப்பை தேர்வு செய்து நாம் ஏற்கனவே சேமித்து வைத்துள்ள கோப்புகளை mail-ல் இணைத்து அனுப்பலாம்.





அதனைத் தொடர்ந்துள்ள Draft window-ல் நாம் அனுப்ப வேண்டிய தகவல்களை Type செய்து கொள்ளலாம்.

Mail அனுப்புவதற்கு முழுமையாக தயாரானவுடன் **Send** என்ற Button-ஐ Click செய்யவும்.

Mail சென்று சேர்ந்தவுடன் Your Mail Has been sent. என்ற வாக்கியம் Mail window-ல் தோன்றும்.





தேவையில்லாத mail-களை அழிப்பதற்கு, அழிக்கவேண்டிய mail-ற்கு முன் உள்ள Check box-ல் அடையாளமிட்ட பிறகு **Delete** என்ற Button-ஐ அழுத்தவும்.




தானாக வரும் விளம்பரங்களை காண **Spam** என்ற இணைப்பை தேர்வு செய்யவும்.


Google mail window-ன் மேல் பகுதியில் உள்ள Documents என்ற இணைப்பானது நம்முடைய File-களை CD-யிலோ அல்லது Pen Drive-விலோ எடுத்த செல்ல இயலாத பொழுது Google-ன் Documents-ல் File-களை சேமித்து வைத்துக் கொண்டு எங்கு சென்ற பொழுதும் நம்முடைய document-களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.




Gmail-ல் நாம் கடைபிடித்த அதே வழிமுறைகளை ஒரு சில மாற்றங்களுடன் பயன்படுத்தி மற்ற mail server-களிலும் mail account-களை உருவாக்கவோ mail-களை கையாளவோ செய்யலாம்.

## Chat

Chat என்ற வசதியானது Internet-ல் உலகில் எந்த பகுதியில் உள்ளவருடனும் நாம் நேரடியாக பார்த்து உரையாட பயன்படுகிறது.





இறுதியாக நாம் பயன்படுத்திய email முகவரிகள் பட்டியலிடப்பட்டுள்ளதில் ஏதேனும் ஒன்றை தேர்வு செய்தோ அல்லது Invite a friend என்ற இணைப்பில் வேறு நன்பர்களுக்கு அழைப்பு விடுத்து எழுத்து மூலமான உரையாடலை தொடரலாம்.


Video Chat-ற்கு Gmail Window-ன் இடது கீழ் பகுதயில் உள்ள **Try video chat** என்ற இணைப்பை தேர்வு செய்யவும்.

பிறகு வரும் Window-ல் Voice and Video chat இல்லை யென்றால் **Install Voice and Video Chat** என்ற Button-ஐ Click செய்யவும்.


Internet-ல் நாம் எந்தெந்த website-களை இதுவரை பார்த்தோமோ அவை Recent History-ல் சேமிக்கப்பட்டு Address bar-ல் நாம் ஏதேனும் ஒரு எழுத்தை அழுத்தியவுடன் அவைகளை பட்டியலிட்டுவிடும். அவற்றை அழிப்பதற்கு Mozilla FireFox browser-ல் **Tools** menu-விற்கு சென்று **Clear Recent History**-ஐ தேர்வு செய்யவும்.





பிறகு வரும் Clear Recent History என்ற Window-ல் **Clear Now** என்ற Button-ஐ Click செய்யவும்.




Internet Explorer-ஐ பயன்படுத்தினால், **Tools** மெனுவிற்கு சென்று **Delete Browsing History**-ஐ தேர்வு செய்யவும்.





பிறகு தோன்றும் Delete Browsing Histroy என்ற Window-ல் **Delete All**… என்ற Button-ஐ Click செய்யவும்.



நமக்கு பிடித்த அல்லது அடிக்கடி பயன்படுத்தும் இணையத் தளங்களை எளிதாக அனுகுவதற்கு Mozilla FireFox-ல் Book marks என்ற வசதியும், Internet Explorer-ல் Favorites என்ற வசதியும் கொடுக்கப்பட்டுள்ளது.


Mozilla FireFox Browser-ல் தற்பொழுதுள்ள இணையத் தளத்தை Bookmark செய்ய Menu bar-ல் உள்ள **Bookmarks**-ஐ தேர்வு செய்யவும் பிறகு **Book mark this page** என்பதனை தேர்வு செய்யவும்.

பிறகு வரும் Window-ல் **Done** என்ற Button-ஐ Click செய்யவும்.




இவ்வாறு சேமிக்கப்பட்ட பக்கங்களுக்கு மீண்டும் செல்ல Menu bar-ல் உள்ள **Book marks**-ஐ தேர்வு செய்தால் அங்கு நாம் அடையாளமிட்ட இணைய பக்கங்கள் பட்டியலிடப்பட்டிருக்கும் அவற்றில் தேவையான பக்கத்தை தேர்வு செய்து அந்த பக்கத்திற்கு செல்லலாம்.

தற்பொழுதுள்ள இணைய தளத்தை Internet Explore-ன் Favorite-ல் சேர்க்க **Favorites** என்ற மெனுவில் **Add to Favorite**-ஐ தேர்வு செய்யவும்.
பிறகு வரும் Window-ல் **Add** என்ற Button-ஐ Click செய்யவும்.




இவ்வாறு சேமிக்கப்பட்ட பக்கங்களுக்கு மீண்டும் செல்ல Menu bar-ல் உள்ள **Favorite**-ஐ தேர்வு செய்தால் அங்கு நாம் Favorite-ல் சேர்த்த இணையப் பக்கங்கள் பட்டியலிடப்பட்டிருக்கும் அவற்றில் தேவையான பக்கத்தைத் தேர்வு செய்து அந்த பக்கத்திற்கு செல்லலாம்.